பொது சுற்று நிருபக் கடிதம் - 02-32/2013

எனது இலக்கம்:- சிஎப்/ஈஎவீஸ்ஈ/01/2013
சுகாதார அமைச்சு,
'சுவசிரிபாய',
385, வண.பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை,
கொழும்பு - 10
2013.01.29. ஆம் திகதி

மாகாண சுகாதார செயலாளர்கள்,
மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்கள்,
பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்கள்,
பன்முகப்படுத்தப்பட்ட பகுதித் தலைவர்கள்,
மத்திய அமைச்சின் கீழுள்ள
சகல வைத்தியசாலைகளின் பணிப்பாளர்களுக்கும்,
நிறுவனத் தலைவர்களுக்கும்.

ஆரம்பதர வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களுக்குமான திணைக்களப்பரீட்சை - 2013 பங்குனி

1991.05.17ஆம் திகதியும் 662/11ஆம் இலக்கமும் கொண்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள சுகாதார சேவையின் வைத்திய உத்தியோகத்தர்கள் தொடர்பான நியதிச் சட்டக் கோவையின் 07ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் **ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்கள் 11ஆம் தரத்திற்கு உயர்த்தப்படுவதற்கு முன்பும் , பல் சத்திர சிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்கள் தமது சேவையில் உறுதிப்படுத்தப்படுவதற்கு முன்பும்** தேர்ச்சியடைய வேண்டிய திணைக்களப் பரீட்சை **2013.03.24** ஆம் திகதி சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளிலும் நடாத்தப்படும் என்பதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது. பரீட்சை டாத்தப்படும் இடமும் கால அட்டவணையும் பிரவேசப் பத்திரத்துடன் அனுப்பி வைக்கப்படும்.

02. **தகைமைகள்**

இதுவரை இப்பரீட்சையைப் பூரணப்படுத்தாத ஆரம்பதரத்தின் வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களுக்கு மட்டும் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்.

03. **விண்ணப்பங்கள்**

இச்சுற்று நிருபத்தில் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தைப் போன்று விண்ணப்பதாரரிகளினால் தயாரித்துக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் நிறுவனத் தலைவரின் மூலம் சுகாதார அமைச்சு ,கொழும்பு - 10, இலக்கம் 385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, சுவசிரிபாய கட்டிடத்தில் பணிப்பாளர் (பரீட்சை) அவர்களுக்கு **2013.03.01** ஆம் திகதி அல்லது அத்தினத்திற்கு முன்பு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலின் மூலம் அனுப்ப வேண்டும். தனது விண்ணப்பத்துடன் **முகவரி எழுதப்பட்ட** ரூபா **30.00** பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட 9"x4" அளவுள்ள கடித உறையொன்றும் அனுப்ப வேண்டும். (இதில் விரும்பிய வகையில் அலுவலக முகவரி அல்லது சொந்த முகவரியை எழுதலாம்).

கவனிக்கவும் : **மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய விண்ணப்பம் A4 தாளின் இரண்டு பக்கங்களையும் உபயோகத்து தாயரிக்கப்படவேண்டும். முதற் பக்கத்தில் இலக்கம் 01 – 04 (இ) தொடக்கமும் இரண்டாம் பக்கத்தில் 04 (ஈ) - 07 தொடக்கமும் அமையும் வண்ணம் விண்ணப்பம் தயாரிக்கப்படல் வேண்டும். மேற்படி தகவல்களுக்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.**

பரீட்சைக் கட்டணம்

1. முதன் முறையாகப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்கள், பரீட்சைக் கட்டணத்தினின்றும் விதிவிலக்கப்படுவர். ஏனைய விண்ணப்பதாரர்கள் ஒரு விடயத்திற்கு ரூபா 25/- வீதம் மதிப்பிழக்கப்படாத முத்திரைகளை விண்ணப்பத்தில் ஒட்டி அதன் மேல் தனது கையொப்பத்தையும் திகதியையும் இட்டு அதை செல்லுபடி நீக்கம் புரியப்படுதல் வேண்டும்.

11. எக்காரணத்தைக் கொண்டும் இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் வேறு பரீட்சையொன்றின் பொருட்டு மாற்றவோ அல்லது மீளச் செலுத்தப்படுதலோ புரியப்படமாட்டாது.

05. பரீட்சைக்கு உட்படுத்திக்கொள்தல்

1. ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும். அவ் அனுமதிப்பத்திரங்களை உரிய முறையில் நிரப்பி பரீட்சை நிலைய அதிபருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டைகள் சமர்ப்பிக்கப்படாத எந்தஒரு பரீட்சார்த்தியும் பரீட்சைக்கு அனுமதிக்கப்படமாட்டார்.

11. விண்ணப்பதாரர்களினால் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை நிலைய அதிபருக்குத் தனது அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதன் பொருட்டு கீழே குறிப்பிடப்படும் ஆவணங்களில் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ). தேசிய அடையாள அட்டை

(ஆ). திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை

(இ). சாரதி அனுமதிப்பத்திரம்

(ஈ). கடவுச்சீட்டு

111. தவிர்க்க முடியாத காரணத்தினால் பரீட்சை அனுமதிப் பத்திரம் கிடைக்கப் பெறாதவிடத்து சுகாதார அமைச்சின் இணையத்தளத்தில் தங்களினது பரீட்சைச் சுட்டெண், பரீட்சை நிலையம் என்பவற்றினை பெற்றுக்கொண்டு தங்களது கையொப்பத்தினை உறுதிப்படுத்திய திணைக்களத் தலைவரின் கடிதத்துடன் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை நிலையத்தில், இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சுட்டெண்ணில் தாங்கள் பரீட்சையினை மேற்கொள்ள முடியும். அனுமதி அட்டை கிடைக்கப் பெற்றவர்கள் கட்டாயமாக கையொப்பத்தினை உறுதிப்படுத்திக்கொண்டு வருதல் வேண்டும். **(கையொப்பத்தினை உறுதிப்படுத்திய கடிதம் அல்லது கையொப்பம் உறுதிப்பதுப்பட்ட அனுமதி அட்டையினை முன்னளிப்பு செய்யாதவர்கள் பரீட்சைக்கு தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்)**

(சுகாதார அமைச்சின் இணையத்தள முகவரி WWW.health.gov.lk)

06. பரீட்சைத் திட்டம்

இப்பரீட்சை மூன்று எழுத்து மூல வினாப்பத்திரங்களையும் சிங்களம்/தமிழ் வாய்மொழிப் பரீட்சையொன்றையும் கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிற்கும் 100 புள்ளிகள் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. தேர்ச்சியடைவதன் பொருட்டு ஒரு விடயத்திற்கு குறைந்தபட்சம் 50 புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஒரு அமர்வில் அல்லது பல அமர்வுகளில் பிரிவுகளுக்குத் தோற்றி பரீட்சையைப் பூரணப்படுத்திக் கொள்ளலாம்.

07. பரீட்சைப் பாடத்திட்டம்

7.1 எழுத்துப் பரீட்சை

7.1.1 **தாபனவிதிக்கோவை**

நேரம் 02 மணித்தியாலம். 08 வினாக்களில் 05 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். மொத்தப்புள்ளிகள் 100

பாடவிதானம்

1. தாபனவிதிக்கோவை

(அ). 1ஆம் பிரிவு ii, iii, v, vi, vii, viii, ix, xi, xii, xiii, xv, xxiv, xxv, xxvii, xxviii, xxx, xxxi, xxxii, xxxiii அத்தியாயங்கள்.

(ஆ). 11ம் பிரிவு XLVII, XLVIII ஆகிய அத்தியாயங்கள்

11. சுகாதார சேவைத் திணைக்களத்தின் பொதுவான ஒழுங்குவிதிகள்.

111. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைகள்.

7.1.2 **வைத்தியசாலைகள். மருந்துச்சாலைகள் என்பனவற்றின் நிர்வாகம்**

நேரம் 1 1/2 மணித்தியாலம். 07 வினாக்களில் 04 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். மொத்தப்புள்ளிகள் 100.

பாடவிதானம்

சுகாதாரக் கைநூல்

1ஆம் பிரிவு - வைத்திய சேவை

11ஆம் பிரிவு - இரசாயணசூட சேவை

7.1.3 **கணக்கியல்**

நேரம் 02 மணித்தியாலம். 07 வினாக்களில் 04 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். மொத்தப்புள்ளிகள் 100.

பாடவிதானம்

1. நிதிப்பிரமாணம்

1 ஆம் அத்தியாயம் - எல்லாப் பிரிவுகளுக்கும்

11 ஆம் அத்தியாயம் - எல்லாப் பிரிவுகளுக்கும்

111ஆம் அத்தியாயம் - எல்லாப் பிரிவுகளுக்கும்

1V ஆம் அத்தியாயம் - எல்லாப் பிரிவுகளுக்கும்

V ஆம் அத்தியாயம் - 1, 2, 3, 4, 6 ஆம் பிரிவுகள்

V1 ஆம் அத்தியாயம் - எல்லாப் பிரிவுகளுக்கும்

V11 ஆம் அத்தியாயம் - 1, 2, 3, 4, 6 ஆம் பிரிவுகள்

11. சுகாதாரத் திணைக்களத்தில் களஞ்சியக் கணக்கு வைத்தல் தொடர்பான ஒழுங்குவிதிகள்.

111. சுகாதாரத் திணைக்களத்தில் வழிகாட்டிக் கைநூலில் நிதி தொடர்பான பந்தி.

1V. சுகாதார வைத்திய உத்தியோகத்தர் ஒருவரின் நாளாந்த கடமைகளுக்கு ஏற்புடைய நிதிப்பிரமாணம்.

7.2 **சிங்களம்/தமிழ் வாய்மொழிப் பரீட்சை**

சிங்களம்/தமிழ் ஆற்றலை அளப்பதன் பொருட்டு திணைக்களத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்களினால் கொழும்பில் நடாத்தப்படும் வாய்மொழிப் பரீட்சையாகும். மொத்தப்புள்ளிகள் 100. தனது நாளாந்த கடமைகளில் ஈடுபடும்பொழுது மேலோங்கும் நிகழ்வுகளின் பொருட்டு சிங்களத்தில் அல்லது தமிழ் மொழியில் கலந்துரையாடுவதற்கு உத்தியோகத்தருக்கு உள்ள ஆற்றலைப் பரீட்சித்தல்.

08. தயவுசெய்து இச் சுற்றுநிருபத்தை உங்கள் பிரிவில்/விசேட இயக்கத்தில்/ நிறுவனத்தில் கடமையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு அறிவிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளவும். இத்தகவல்கள் www.health.gov.lk எனும் இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளமுடியும்.

M. B. L. Rahuman
Deputy Director General (Admin) II
Ministry of Health,
"Suwasiripaya",
Colombo 10.

எம் பீ எல் ரகுமான்.
பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்) II
சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்காக

அலுவலகப் பிரயோகத்தின் பொருட்டு

மாதிரி விண்ணப்பப்படிவம்

ஆரம்பதர வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களுக்குமான திணைக்களப்பரீட்சை – 2013 பங்குனி

01. (அ).1. விண்ணப்பதாரரின் பெயர்(சிங்களத்தில் அல்லது தமிழில் முதலெழுத்துக்களை இறுதியில்எழுதவும்) .....

.....

11. விண்ணப்பதாரரின் பெயர் (ஆங்கில கபிடல் எழுத்தில் முதலெழுத்துக்களை இறுதியில் எழுதவும்)

முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர்கள்(சிங்களத்தில் அல்லது தமிழில்) .....

.....

iv முதலெழுத்தக்களினால் குறிப்பிடப்படும் பெயர்கள்(ஆங்கில கபிடல் எழுத்தில்)

(ஆ).i. அலுவலகப் பெயர் (வைத்திய உத்தியோகத்தர்/பல் சத்திரசிகிச்சை வைத்தியஉத்தியோகத்தர்)

.....

ii. தகதிசுர் நிலைக்கால நியமனம் பெற்ற திகதி- .....

iii. ஆரம்ப தரத்திற்கு நியமிக்கப்பட்ட திகதி - .....

02. நீங்கள் இம்முறை தோற்றுவதற்கு எதரிபார்க்கும் விடயங்களுக்கு முன்னால் உள்ள கூண்டினுள் (✓) அடையாளத்தை இடவும். தோற்றாவிடின் (✗) குறியை இடவும்

வைத்தியசாலைகள் மருந்துச் சாலைகள் என்பனவற்றின் நிர்வாகம் ☐ தாபனவிதிக்கோவை ☐ கணக்கியல் ☐

சிங்களம் வாய்மொழி ☐ தமிழ் வாய்மொழி ☐

03. பரீட்சைக்குத் தோற்றும் மொழி (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) .....

04. (அ). தற்பொழுது சேவையாற்றும் இடம். .....

(ஆ). அதற்குரிய மாவட்டம் .....

(இ). கீழ்வரும் பரீட்சை நிலையங்களுள் விரும்பிய பரீட்சை நிலையம். **(தெரிவு செய்யும் பரீட்சை நிலையத்திற்கு போதிய விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து அண்மையிலுள்ள பரீட்சை நிலையத்திற்கு அல்லது சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும் பரீட்சை நிலையத்திற்கு அழைக்கப்படுவர்)** பொருத்தமான கூண்டினுள் சரி (√) அடையாளமிடுக.

கொழும்பு	☐	கந்தானை	☐	அம்பாந்தோட்டை	☐	அம்பாறை	☐
களுத்துறை	☐	காலி	☐	பதுளை	☐	வவுனியா	☐
குருணாகல்	☐	அனுராதபுரம்	☐	இரத்தினபுரி	☐		
கண்டி	☐	மட்டக்களப்பு	☐	யாழ்ப்பாணம்	☐		

(ஈ). அனுமதிப்பத்திரம் அனுப்புவதன் பொருட்டு பிழையற்ற தெளிவாக முகவரி எழுதப்பட்ட 9"x4" அளவுள்ள ரூபா 30.00 பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்ட கடித உறையொன்று விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

(உ).1. அஞ்சல் முகவரி (சிங்களத்தில் அல்லது தமிழில்).....

.....

11. அஞ்சல் முகவரி (ஆங்கில கபிடல் எழுத்தில்) .....

.....

05. (அ). இதற்கு முன் இப்பரீட்சைக்குத் தோற்றி உள்ளீர்களா? .....

(ஆ). முதன் முறை அல்லாவிடின் முத்திரைகள் ஒட்டப்பட்டுள்ளனவா?அவ்வாறு தோற்றி இருப்பின் இம்முறையின் பொருட்டு முத்திரைகள் ஒட்டியுள்ளதா? .....

முத்திரைக் கூண்டு

06. **விண்ணப்பதாரரின் சான்றிதழ்**

எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவகையில்

(1). இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவைகளெனவும், நான் இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதன்முறையாக என்றபடியினால் கட்டணம் செலுத்தத் தேவையில்லை எனவும் /முதன் முறை அல்லாதபடியால் ரூபா ..... பெறுமதியான முத்திரைகள் ஒட்டியுள்ளதெனவும், இவ்விண்ணப்பத்திற்கு என்னால் ஒட்டப்பட்டுள்ள முத்திரைகள் செல்லுபடி நீக்கம் செய்யப்படுவதற்கு முன்பு பாவிக்கப்படாத முத்திரைகள் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(11). சுகாதார சேவைத் திணைக்களத்தினால் பரீட்சை தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு அமைந்து நடப்பதற்கும், இப்பரீட்சை தொடர்பான நியதிச் சட்டத்தின் படி நான் தகைமையற்றவன் எனக் காணப்படின் எனது பரீட்சார்த்தித் தன்மையை இரத்து செய்வதற்கு மேற்கொள்ளப்படும் எவ்விதத் தீர்மானத்திற்கும் நான் அமைவேன் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி .....

.....

விண்ணப்பதாரரின் கையொப்பம்

07. **நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

திருவாளர்/திருமதி/செல்வி ..... என்பவரை நான் நன்றாக அறிவதுடன், இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதன் முறை/அல்லாத படியால் ரூபா .....பெறுமதியான முத்திரைகள் இவ்விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளதாகவும்/ முத்திரை ஒட்ட வேண்டியதில்லை எனவும் விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் விண்ணப்பதாரரின் பெயர்வழிக்கோவையிலுள்ள விபரங்களின் படி பிழையற்றவைகளெனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவனுக்கு /அவளுக்குத் தகைமைகள் உண்டு எனவும் எனது முன்னிலையில் கையொப்பம் இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி : .....

.....

நிறுவனத் தலைவரின் கையொப்பம்

08. **பன்முகப்படுத்தப்பட்ட பகுதி/விசேட இயக்கத் தலைவரின் சான்றிதழ்**

திருவாளர்/திருமதி/செல்வி ..... என்பவர் வைத்திய உத்தியோகத்தர் ஒருவர்/ பல் சத்திர சிகிச்சை வைத்தியர் ஒருவராக எனது பிரிவில்/ இயக்கத்தில் சேவையாற்றுகின்றார் எனவும் விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் விண்ணப்பதாரரின் பெயர்வழிக்கோவையிலுள்ள விபரங்களின் படி பிழையற்றவைகளெனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவனுக்கு /அவளுக்குத் தகைமைகள் உண்டு எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

.....

பன்முகப்படுத்தப்பட்ட பகுதி/விசேட
இயக்கத் தலைவரின் கையொப்பம்
(முத்திரை இடப்படுதல் வேண்டும்)

திகதி - .....

(* தேவையற்றனவற்றைக் கீறிவிடவும்)